# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,569—1965 නොවැම්බර් 26 වැනි සිකුරාදා—1965.11.26

14,569 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| ...தாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 601 |
| ...திவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 597 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் . .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி. பி. 117/47

### முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம்

454 ம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 95 ம், 96 ம் ஆகிய பிரிவுகளின்கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரால் ஆக்கப்பட்டு செனற் சபையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதி.

கொழும்பு,
1964 ம் ஆண்டு நொவெம்பர் மீ 25 ந் உ.

சி. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர்.

### ஒழுங்குவிதி

1962 ஒக்டோபர் 19 ந் தேதிய 13,354 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் திருத்தியமைக்கப்பட்டவாறுள்ள 1948 ஒக்டோபர் 15 ந் தேதிய 9,912 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1948 ம் ஆண்டின் முடிக்குரிய காணிகள் ஒழுங்குவிதிகள் பின்வருமாறு மேலும் திருத்தியமைக்கப்படுகின்றன :—

(1) 7 ம் ஒழுங்குவிதியின் கண் (இ) என்னும் பந்தியையுடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்,

" (ஈ) திருத்தப்படுவதற்கு அல்லது மாற்றியமைக்கப்படுவதற்குரிய கையளித்தற் சாதனம் சேனையின் ஏவுநரால் முற்றுவிக்கப் பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஏவுநர் அந்தச் சாதனத்தைத் திருத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம்,

(உ) திருத்தப்படுவதற்கு அல்லது மாற்றியமைக்கப்படுவதற்குரிய கையளித்தற் சாதனம் கடற்படைத் தளபதியினால் முற்றுவிக்கப் பட்டிருக்கு மிடத்து அத்தகைய தளபதி அச்சாதனத்தைத் திருத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம்,

(ஊ) திருத்தப்படுவதற்கு அல்லது மாற்றியமைக்கப்படுவதற்குரிய கையளித்தற் சாதனம் ஆகாயப்படையின் ஏவுநரால் முற்றுவிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஏவுநர் அந்தச் சாதனத்தைத் திருத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம் ".

(2) அதற்குரிய இரண்டாம் அட்டவணையில்

(அ) 5 ம் விஷயத்தினையுடனடுத்துப் பின்வரும் புதிய விஷயத்தினைச் சேர்த்தல் மூலமும்,

| | | |
|---|---|---|
| (6) சேனையின் ஏவுநர் | .. | அட்டவணையினுள் 1 ம் விஷயம், 2 ம் விஷயம் என்பவற்றிற் குறிப்பிடப்பட்ட கையளித்தல் ஒன்றல்லாத, சேனையின் ஏவுநரின் பொறுப்பிலுள்ள முடிக்குரிய காணி ஐந்து வருடங்களுக்கு மேற்படாததொரு காலத்துக்குக் கையளித்தல். |
| (7) கடற்படைத் தளபதி | .. | அட்டவணையின் 1 ம் விஷயம், இரண்டாம் விஷயம் என்பவற்றிற் குறிப்பிடப்பட்ட கையளித்தல் ஒன்றல்லாத கடற்படைத் தளபதியின் பொறுப்பிலுள்ள முடிக்குரிய காணி ஐந்து வருடங்களுக்கு மேற்படாததொரு காலத்துக்குக் கையளித்தல். |
| (8) ஆகாயப்படை ஏவுநர் | .. | அட்டவணை 1 ம் விஷயம், 2 ம் விஷயம் என்பனவற்றிற் குறிப்பிட்ட கையளித்தல் ஒன்றல்லாத ஆகாயப்படை ஏவுநரின் பொறுப்பிலுள்ள முடிக்குரிய காணி ஐந்து வருடங்களுக்கு மேற்படாததொரு காலத்துக்குக் கையளித்தல். |

(ஆ) 6, 7 என்னும் விஷயங்கள் முறையே 9 ம், 10 ம் விஷயங்களாகத் திரும்ப எண்ணிடுவதன் மூலமும்,

(3) அதற்குரிய மூன்றும் அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலமும்,

3 ம் அட்டவணை

(ஒழுங்குவிதி 24)

| கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் | உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்கள் |
|---|---|
| 1. 2 ம் பிரிவின (2) ம், (3) ம் வாசகங்கள் .. | காணி நிர்ணய உத்தியோகத்தர்/அரசாங்க அதிபர்/புகையிரதப் பகுதி பொது முகாமையாளர்/கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவின் தலைவர்/சேனை எவுநர்/கடற்படைத் தளபதி/ஆகாயப்படை எவுநர். |
| 2. 2 ம் பிரிவின் (4), (5) ம் வாசகங்கள் .. | அரசாங்க அதிபர்/புகையிரதப் பகுதி பொது முகாமையாளர்/கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவின் தலைவர்/சேனை எவுநர்/கடற்படைத் தளபதி/ஆகாயப்படை எவுநர். |
| 3. 2 ம் பிரிவின் (6) ம் வாசகம் .. | அரசாங்க அதிபர். |
| 4. 3, 14 ம், 15ம் பிரிவுகள் .. | காணிக் கொமிஷனர்/அரசாங்க அதிபர்/புகையிரதப் பகுதி பொது முகாமையாளர்/கொழும்புத் துறைமுக ஆணைக்/குழுவின் தலைவர்/சேனை எவுநர்/கடற்படைத் தளபதி/ஆகாயப்படை எவுநர். |
| 5. 4, 5, 7, 24 (1) 61 ம் பிரிவுகள் .. | காணிக் கொமிஷனர். |
| 6. 6 பிரிவு .. .. | காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர். |
| 7. 13 ம் பிரிவு .. .. | காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர்/போக்குவரத்து நிர்மாண வேலைகள் அமைச்சர்/காணிக் கொமிஷனர்/அரசாங்க அதிபர்/புகையிரதப் பகுதி பொது முகாமையாளர்/கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவின் தலைவர்/சேனை எவுநர்/கடற்படைத் தளபதி/ஆகாயப்படை எவுநர். |
| 8. 60 ம் பிரிவு .. .. | காணிக் கொமிஷனர்/கொழும்புத் துறைமுக ஆணைக் குழுவின் தலைவர். |
| 9. 100 ம் பிரிவு .. .. | காணிக் கொமிஷனர்/வேறு எந்த அரசாங்கப் பகுதியினதும் தலைவர். |

3-1061

---

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தொழில்வசதி, வீடமைப்பு மந்திரி, பின் வரும் பேர்வழிகளை, 1965 ம் ஆண்டு மே மாதம் 10 ந் தேதி தொடக்கம் 3 ஆண்டு காலத்திற்கு கறுவாத்தொழிற் சம்பளச் சபையில் அங்கம் வகித்தற்கு, மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப் படுகிறது.

ஏ. ஒ. வீரசிங்க,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு
மந்திரி காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 16 ந் திகதி.

நியமன அங்கத்தவர்கள்

1. திரு. பி. ஆர். விக்ரமசிங்க
2. திரு. கப்பித்தான் ஏ. சீ. கனகசிங்கம்
3. திரு. ரீ. வீ. எம். நூன்

முதலாளிகளின் பிரதிநிதிகள்

1. திரு. ஜே. ஈ. பி. ராஜபக்ஷ
2. திரு. கே. ஜீ. சீ. அபேசூரிய
3. திரு. லோயிட் விக்ரமசூரிய
4. திரு. எஸ். ஜீ. ஏ. த சில்வா
5. திரு. ஒஸ்டின் ஏ. த சில்வா
6. திரு. டீ. டபிள்யு. விக்ரமரத்ன

தொழிலாளரின் பிரதிநிதிகள்

1. திரு. ரீ. ஒஸ்டின் மென்டிஸ்
2. திரு. கே. டபிள்யு. றூசன் சில்வா
3. திரு. எச். அலென்டி சில்வா
4. திரு. வில்சன் விஜேதுங்க
5. திரு. எம். ஜீ. மென்டிஸ்
6. திரு. டீ. யூ. ஜயசேகர.

11-964

---

## சம்பளச்சபைக் கட்டளைச் சட்டம்

### 7 ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின்கீழ், தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர் மொஹமது ஹனிபா மொஹமது ஆகிய நான் (சொக்கிளெற் உற்பத்தி செய்தல் உட்பட்ட) விசுக்கோத்து, மிட்டாய்வகை உற்பத்தித்தொழில் சம்பந்தமான கட்டளை ஒன்றை இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப் பட்டவாறு, பிறப்பிக்கவிருக்கும் எனது கருத்தை மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 7 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கி றேன்.

உத்தேசித்துள்ள கட்டளைக்கு ஆட்சேபனைகள் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ந் திகதி பகல் 12 மணிவரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் எழுத்திற் கூறப்படுவதோடு அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கொண்ட கூற்றொன்றைக்கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

மு. ஹ. முஹமத்,
தொழில், தொழில்வசதி, வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 16 ந் வ.

### அட்டவணை

சம்பளச் சபைச் சட்டத்தின் II ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்குப் பொருந்துதல்வேண்டும்.

(சொக்கிளெற்று உற்பத்திசெய்தல் உட்பட்ட) விசுக்கோத்து, மிட்டாய் வகை உற்பத்தித்தொழில், இது பின்வருவனவற்றுள் யாதாயினுமொன்றை அல்லது பலவற்றைக் கொண்டதாகும். அதாவது,

(1) விசுக்கோத்து உற்பத்திசெய்தல் ;

(2) எருப்பி, பெப்பர்மின்ற், மிட்டாய்வகை, தித்திப்புப்பண்டம், ஜுஜுப்ஸ் ஆகியனவும் மற்றும் இனிப்புப் பண்டங்களும் உற்பத்திசெய்தல் ;

(3) சொக்கிளெற்று, கொக்கோப்பொடி, கொக்கோ வெண்ணெய் ஆகியன உற்பத்திசெய்தல்.

பின்வருவனவும் இதற்குட்படும்—

(அ) விசுக்கோத்து :

(1) மாவையும் சீனியையும் தாவரவெண்ணெய் (Margarine) தாவரக்கொழுப்பு, பழச்சர்க்கரை (Glucose) லெசித்தீன், சாரம், கொக்கோப்பொடி, பாலாடைக்கட்டி, மோல்ற்று, பால்மா, இரசாயனப் பொருள்கள், வெண்ணெய், அம்மோனியா, அப்பச்சோடா, முட்டை ஆகியவற்றையும் மற்றும் சேர்ப்புத் திரவியங்களையும் பெறுதலும் சேகரித்தலும், சம்பந்தமானவேலை ;

(2) சேர்ப்புத்திரவியங்களை ஏற்றுதலும் இறக்குதலும் சுமந்துசெல்லுதலும் ஏற்றிச்செல்லுதலும் சம்பந்தமான வேலை ;

(3) மா அரித்தல் சம்பந்தமான வேலை ;

(4) கலக்கும் தொட்டிகளையும் கொள்கலங்களையும் சுத்திகரித்தல், சேர்ப்புத்திரவியங்களை நிறைபோடுதல் அளத்தல் ஆகியன, இரசாயனப் பொருள்கள், சாரங்கள், சாயம் ஆகியவற்றை கூட்டுதல், கலக்கு கருவிக்கு ஊட்டுதல் ஆகிய சம்பந்தமான செய்கைகள் ;

(5) பிசைந்த மாவைப்பிரித்தல் சம்பந்தமான செய்கைகள் ;

(6) கலக்கப்பட்ட பிசைந்த மாவை வெட்டுமேசையில் பரவுதலும் உருட்டுதலும், தட்டையாக்குதலும் ;

(7) வெட்டுபொறி சம்பந்தமான வேலை ;

(8) வெட்டுதலும் புற உரு அமைத்தலும் சம்பந்தமான செய்கைகள் ;

(9) ஆற்று பரணுக்கும் அதிலிருந்தும் வெந்த விசுக்கோத்துக்களை சுமந்து செல்லுதல் ;

(10) கனல் அடுப்பில் இடுவோரினதும் கனல் அடுப்பு உதவியாளரினதும் வேலை உட்பட விசுக்கோத்துச் சுடுதல் ;

(11) விசுக்கோத்துத் தகரங்களையும் பொட்டலங்களையும் சுமந்து செல்லுதல், அடுக்குதல், ஏற்றுதல், இறக்குதல் ஆகியன சம்பந்தமான வேலை ;

(12) தட்டங்களையும் கொள்கலங்களையும் கழுவுதலும் சுத்திகரித்தலும் ;

(13) வெட்டிய விசுக்கோத்தைச் சேர்த்தலும் வரிசைப்படுத்தலும் ;

(14) பொட்டலமாக்குதலும், வெப்பத்தால் முத்திரையச்சிடுதலும் நாமவிலாசமொட்டுதலும், அடைத்தலும், பெட்டிகளை ஒட்டுதலும் ;

(15) அடுக்கு பொறி சம்பந்தமான வேலை ;

(16) (அ) ம் பந்தியிற் குறிக்கப்பட்ட வேலை சம்பந்தமாகவும் அவ்வேலையின் போதும் ஏற்படும் மற்றும் செய்கைகளெவையாயினும்.

(ஆ) மிட்டாய்வகை :

(1) பழச்சர்க்கரை, சீனி, சாரங்கள், கொக்கோ விதைகள், பால்மா, தாவரவெண்ணெய் ; ஊன்பசை (Gelatine) இரசாயனப் பொருள்கள், வாசனை ஆகியவற்றைப்பெறுதலும் சேகரித்தலும் சம்பந்தமான வேலை ;

(2) சேர்ப்புத்திரவியங்களை நிறைபோடுதலும், அளத்தலும், கலத்தலும் ;

(3) சேர்ப்புத்திரவியங்களை அவித்தல் ;

(4) வெப்பமேசைகளுக்கும் அவற்றிலிருந்தும் பாகுவை அகற்றுதல் ;

(5) ஆற்று மேசைகளுக்கும் அவற்றிலிருந்து பாகுவை அகற்றுதல் ;

(6) பாகு வெட்டி சம்பந்தமான செய்கைகள் ;

(7) பாகுவைத் தட்டங்களிலிடுதல் சம்பந்தமான வேலை ;

(8) வெட்டிச்சுற்றும் பொறி சம்பந்தமான செய்கைகள் ;

(9) தித்திப்புப்பண்டங்கள், சொக்கிளெற்று, ரொப்பி ஆகியவற்றை வகைப்படுத்தல் ;

(10) ரொப்பி, சொக்கிளெற்று, தித்திப்புப்பண்டங்கள் ஆகியவற்றை நிறைபோடுதலும் அடைத்தலும் ;

(11) பைகளுக்கு முத்திரையச்சிடுதல் ;

(12) தவளத்துப்பொறி சம்பந்தமான செய்கைகள் ;

(13) மத்தி செய்பொறி (Centre Manufacturing Machine) சம்பந்தமான செய்கைகள் ;

(14) ரவையாக்கு பொறி சம்பந்தமான செய்கைகள் ;

(15) சாரம், சீனி, சாயப்பொருள் ஆகியன சேர்த்தல் உட்பட அசைதாச்சிகள் சம்பந்தமான வேலை ;

(16) தித்திப்புப் பண்டங்களைத் தட்டங்களிற் சேர்த்தலும் தித்திப்புப் பண்டங்களை வெப்பம் மூட்டும் அறைகளில் உலரவைத்தலும் ;

(17) ஊன்பசையும் சாயப் பொருளும் சேர்த்தல் ;

(18) புற உரு அமைக்கும் பொறி சம்பந்தமான வேலை ;

(19) அரிக்கும் பொறி சம்பந்தமான வேலை ;

(20) ஜூஜூப்பைத் தட்டங்களிற் சேர்த்தலும் நிறைபோடுதலும் அடைத்தலும் ;

(21) கொக்கோ விதைகளைச் சுத்திகரித்தலும் வறுத்தலும் ;

(22) வறுத்த கொக்கோ விதைகளை சித்திபொறியினுள் இடுதல் ;

(23) பதப்படுத்துபொறி, மண்டி இறக்குபொறி ஆகியன சம்பந்தமான வேலை ;

(24) சொக்கிளெற் அச்சுகளை நிரப்புதல் ;

(25) அதிர்வுமேசை, ஆற்றுகுழாய் ஆகியன சம்பந்தமான வேலை ;

(26) சொக்கிளெற்றை அச்சுகளிலிருந்து அகற்றுதல் ;

(27) தித்திப்புப்பண்டங்களையும் சொக்கிளெற்றையும் (காகிதத்தில்) சுற்றுதலும், நாமவிலாசமொட்டுதலும், அடைத்தலும் ;

(28) மேலே (ஆ) ம் பந்தியிற் குறிக்கப்பட்ட வேலை சம்பந்தமாகவும் அவ்வேலையின்போதும் ஏற்படும் மற்றும் செய்கைகள் அல்லது நடவடிக்கைகள் எவையாயினும். ஆனால் பின்வரும் வேலையாளரின் வேலை இதற்குட்பட்டதன்று :—

(1) லிகிதர், காசாளர், பண்டகசாலைப்பொறுப்பாளர், நேரக் குறிப்பாளர், காவலாளிகள், பாதுகாப்பாளர் ;

(2) 1945 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதி வெளிவந்த 9,481 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகிய கட்டளையிற்குறிக்கப்பட்ட மோட்டோர்ப் போககுவரத்துத் தொழில் வேலையாளர் ;

(3) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் தேதி வெளிவந்த 9,224 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகியதும் பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத்தொழில் வேலையாளர்.

11-966

## 1958 ம் ஆண்டின் 13 ம் இலக்க துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனச் சட்டம்

1958 ம் ஆண்டின் 13 ம் இலக்க துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபன சட்டத்தின் 63 (1) ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு தேசிய சேவைகள் அமைச்சர் விநான ஆராச்சிகே சுகததாச ஆகிய நான், பணிப்பாளர் சபையுடன் கலந்தாலோசித்த பின்னர், 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ம் தேதிய 11,464 ம் இலக்க விசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விதித்த சேவைகளுக்குரிய கட்டணங்களை, அக்கட்டணங்களின் " அ " அட்டவணையின் 29 ம் விஷயத்திற்குப் பதிலாய பின்வருவதைப் பதிலீடு செய்வதன் மூலம், இக்கட்டளை கசெற்றில் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து, திருத்தம் செய்கிறேன்.

29. தேககுத்தண்டுகள்—தொன்னொன்றிற்கு ரூபா 39.60.

வி. ஏ. சுகததாஸ,
தேசிய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 17 ந் உ.

11-980

## (1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்)

### அரசப் பேரவைக் கட்டளை

1964 ம் ஆண்டின் 10 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 94ஆ என்னும் பிரிவின் மூன்றாம் உட்பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைகொண்டு பாராளுமன்றத் தேர்தல்கள் ஆணையாளரால் ஆக்கப்பட்டு, மேற்குறிப்பிடப்பட்ட பிரிவின் நாலாம் உட்பிரிவின்கீழ் செனெற்றும் பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட விதி.

ஈ. எவ். டயஸ் அபயசிங்க,
பாராளுமன்றத் தேர்தல்கள் ஆணையாளர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 22 ந் உ.

### விதி

1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் முதலாம் அட்டவணை இதனால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அவ்வட்டவணையிலுள்ள C மாதிரிப் பத்திரத்துக்குப் பதிலாக இதற்குள்ள அட்டவணையிற்றரப்பட்டுள்ள C மாதிரிப்பத்திரத்தை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வட்டவணையிலுள்ள D மாதிரிப்பத்திரத்துக்குப் பதிலாக இதற்குள்ள அட்டவணையிற்றரப்பட்டுள்ள D மாதிரிப் பத்திரத்தை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வட்டவணையிலுள்ள CC மாதிரிப்பத்திரத்தினையும் E மாதிரிப் பத்திரத்தினையும் விட்டுவிடுவதன்மூலமும்.

அட்டவணை

C மாதிரிப் பத்திரம்

(பிரிவுகள் 15ஆ(2), 15ஈ(1), 19-(1), (4) )

**தேருநர் இடாப்பொன்றில் ஒருவரின் பெயரைச் சேர்ப்பதற்கு அல்லது சேர்க்கப்பட்ட பெயரை வைத்திருப்பதற்குச் செய்யும் கோரிக்கை**

————தேர்தல் மாவட்டத்தின் பதிவு உத்தியோகத்தருக்கு,

*சேர்க்காது விடப்பட்டுள்ள/நீக்கப்பட்டுள்ள பின்வரும் பெயரை மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பில் *சேர்ப்பதற்கு/வைத்திருப்பதற்கு இத்தால் நான் இக்கோரிக்கையைச் செய்கின்றேன்.

இக்கோரிக்கை சம்பந்தப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :—

(1) *உரிமை கோருபவரின் †[அல்லது எவர்பொருட்டு இக்கோரிக்கை செய்யப்படுகிறதோ அவரின்] முழுப்பெயர் : ————.

குடும்பப் பெயர் அல்லது வமிசப் பெயர் : ————.

வேறு பெயர்கள் : ————.

(2) 19 ம் ஆண்டு யூன் 1 ம் தேதியில் அத்தகைய ஆள், வழமையாக வாசஞ்செய்த தகுதியாக்கும் விலாசம் : ————.

வரிமதிப்பு இலக்கம் : ————. குடியிருப்போர் நிரல் இலக்கம் : ————. வீதியும், *பட்டணமும்/கிராமமும்/தோட்டமும், தபாற் கந்தோரும் : ————.

கிராமச் சேவகர் பிரிவு : ————.

வட்டாரமும் உள்ளூர் அதிகார சபையும் : ————.

(3) 19 ம் ஆண்டு யூன் 1 ம் தேதியில் அவரின் வயது : ————. வருடம் : ————. மாதம் ————.

பிறந்த தேதி : ————.

(4) இத்தால் நான் தெரிவிப்பதாவது :—

(i) *நான் †[எவர்பொருட்டு உரிமை கோரப்படுகிறதோ] அவர் ஓர் *வம்சாவழி/பதிவு இலங்கைப் பிரசை. எம்வசமுள்ள *பிரசாவுரிமைப் பத்திரத்தின்/பதிவுப் பத்திரத்தின்/ஏனைய பிரசாவுரிமைச் சாதனச் சான்றுகளின் இலக்கமும் தேதியும் உட்பட்ட தேவையான விவரங்கள் பின்வருமாறு :————.

(ii) *நான் †[எவர்பொருட்டு உரிமை கோரப்படுகிறதோ அவர்] 19 ம் ஆண்டு யூன் 1 ம் தேதியில், மேலே (2) ம் பந்தியில் குறிக்கப்பட்ட விலாசத்தில் வழமையாக வாசஞ் *செய்தேன்/செய்தார்.

(iii) *நான்† [எவர்பொருட்டு உரிமை கோரப்படுகிறதோ அவர்] மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய அல்லது வேறு ஏதாவது ஒரு தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பொன்றில், வேறோர் விலாசத்தின்கீழ் பதிவு செய்துகொள்ள கோரிக்கை செய்திருக்கவில்லை.

வேறு விவரங்கள் இருப்பின் இங்கு தருக : ————.

**உறுதியுரை**

மேற்குறிக்கப்பட்ட கோரிக்கையில், காட்டப்பட்ட சகல விவரங்களும், உண்மையானவை என்பதையும் மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்தில், தேருநர் ஒருவராகப் பதிவு பெற்றுக்கொள்வதற்கு *நான் தகைமை உள்ளேன் †[எவர் பொருட்டு உரிமை கோரப்படுகிறதோ அவர் தகைமை உள்ளார்] என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
*உரிமை கோருபவரின்/எவர்பொருட்டு உரிமை கோரப்படுகிறதோ அவரின் ஒப்பம் அல்லது பெருவிரலடையாளம்.

தேதி : ————19————

*உரிமை கோருபவரின்/எவர்பொருட்டு உரிமை கோரப்படுகிறதோ அவரின் விலாசம் : ————.

(வேறொருவருக்காக உரிமை கோரின்) இக்கோரிக்கையைச் செய்பவரின் பெயரும் விலாசமும் :————

பெயர் : ————.

விலாசம் : ————.

**இரட்டைப் பிரதியில் அனுப்பப்படவேண்டியது.**

**(இடாப்பில் அல்லது "B" நிரலில் சேர்க்கப்பட்ட ஒரு பெயரை ஆட்சேபிக்கும் சந்தர்ப்பத்தில், பத்திரத்தின் இப்பாகத்தை உபயோகிக்கவும்).****

D மாதிரிப் பத்திரம்

(பிரிவு 15ஆ-(5), (6), பிரிவு 19 (2) )

**ஆட்சேபனைப் பத்திரம்**

..........................................................தேர்தல் மாவட்டத்தின் பதிவு உத்தியோகத்தருக்கு,

..........................................................ஆகிய நான், மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய *தேருநர் இடாப்பில்/"B" நிரலில், பின்னால் குறிக்கப்பட்டு விவரிக்கப்பட்டவரின் பெயர் சேர்க்கப்பட்டதை இத்தால் ஆட்சேபிக்கின்றேன் :—

| | |
|---|---|
| விடயத்துக்கியைய, இடாப்பில் அல்லது "B" நிரலில் உள்ளபடி இங்கே விவரங்களைக் குறிக்கவும். | ஆட்சேபிக்கப்படுபவரின் பெயர் : ————.<br>அவரின் தகுதியாக்கும் விலாசம் : ————.<br>வாக்களிப்பு மாவட்டத்தின் குறி எழுத்து அல்லது எழுத்துக்கள் : ————.<br>பதிவு இலக்கம் : ————.<br>நான் ஆட்சேபிப்பதற்குரிய காரணங்களாவன : ————. |

*பொருந்தாதவற்றை வெட்டிவிடவும்.

†வேறு எவருக்குமாக உரிமைக்கோரிக்கை செய்யுமிடத்து ஏற்புடையவை.

**ஏதேனும் உரிமைக் கோரிக்கையை ஆட்சேபிப்பதற்கு மறுபக்கத்திலுள்ள பகுதியை உபயோகிக்கவும்.

மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய *தேருநர் இடாப்பில்/" B " நிரலில், எனது பெயர், பின்வரும் விவரப்படி பதியப்பட்டுள்ளது :—

விடயத்துக்கியைய, இடாப்பில் அல்லது " B " நிரலில் உள்ளபடி இங்கே விவரங்களைக் குறிக்கவும்

பெயர் : ————.

தகுதியாக்கும் விலாசம் : ————.

வாக்களிப்பு மாவட்டத்தின் குறி எழுத்து அல்லது எழுத்துக்கள் : ————.

பதிவு இலக்கம் :————.

————,
(ஆட்சேபிப்பவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.)

தேதி ————19

ஆட்சேபிப்பவருக்கு அறிவித்தல் கொடுப்பதற்குரிய விலாசம் :

---

D மாதிரிப் பத்திரம்

................................................................................தேர்தல் மாவட்டத்தின் பதிவு உத்தியோகத்தருக்கு.

................................................................................................ஆகிய நான், மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பில் பின்னால் குறிக்கப்பட்டு விவரிக்கப்பட்டவரின் பெயர் *சேர்க்கப்பட்டிருப்பதை வைத்திருக்கப்படுவதை ஆட்சேபிக்கிறேன்.

பெயர் : ————.

தகுதியாக்கும் விலாசம் : ————.

நான் ஆட்சேபிப்பதற்குரிய காரணங்களாவன : ————.

மேற்குறிக்கப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்குரிய *தேருநர் இடாப்பில்/" B " நிரலில், எனது பெயர் பின்வரும் விவரப்படி பதியப்பட்டுள்ளது :—

பெயர் : ————.

தகுதியாக்கும் விலாசம் : ————.

வாக்களிப்பு மாவட்டத்தின் குறி எழுத்து அல்லது எழுத்துக்கள் : ————.

பதிவு இலக்கம் : ————.

————,
ஆட்சேபிப்பவரின் ஒப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

தேதி : ————19

ஆட்சேபிப்பவருக்கு அறிவித்தல் கொடுப்பதற்குரிய விலாசம் :

---

*பொருந்தாதவற்றை வெட்டிவிடவும்.

11-1069

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

எனது இலக்கம் : ஏற்றுமதி 385/4
சுங்கத் திணைக்களம்
கொழும்பு 1

## சகல ஏற்றுமதியாளர்களுக்குமுரிய அறிவித்தல்

இத்தால் சகல ஏற்றுமதியாளர்களுக்கும் அறியத்தருவது யாதெனில் சுங்கச் சட்டம் (அத்தியாயம் 235) 11 ம் பகுதியின் 4 வது பத்தியில் கூறப்பட்டுள்ள வண்ணம் என்னால் அங்கீகரிக்கப் பெற்ற வங்கிகள் கீழே தரப்பட்டுள்ளன. " வங்கி ஒப்புப்பத்திரம் " சமர்ப்பிக்கும் போது என்னால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் பெற்று ஒப்புப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

1. மக்கள் வங்கி.
2. இந்தியன் ஸ்டேட் வங்கி. கொழும்பு.
3. மேர்கன்டைல் வங்கி,
4. நாஷனல் அன்ட் கிறின்ட்லேஸ் வங்கி.
5. நாஷனல் அன்ட் கிறின்ட்லேஸ் வங்கி (கிறின்ட்லேஸ் பகுதி).
6. சாட்டேட் வங்கி.
7. கொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கி.
8. ஈஸ்டேர்ன் வங்கி.
9. இலங்கை வங்கி (மத்திய கந்தோர்), கொழும்பு.
10. இலங்கை வங்கி (வெளியூர்ப் பகுதி).

(2) மேலே குறிக்கப்பட்டுள்ள வங்கிகளால் தரப்படும் ஒப்புப்பத்திரம் தவிர்ந்த ஏனைய வங்கிகளால் தரப்படும் ஒப்புப் பத்திரங்களைக் கொந்தராத்துகளுடன் தருவார்களாயின அத்தகைய கொந்தராத்துகள் செயற்படுமுன்னர் எந்நேரமாயினும் தள்ளுபடியாவதற்கு ஏதுவாயிருக்கும். அல்லாமலும் அத்தகைய ஒப்புப்பத்திரத்தைச் சமர்ப்பிப்போர் காலக் கிரமத்தில் மேலதிகமான வரிகளைக் கட்டவேண்டி நேரிடும். எனவே ஏற்றுமதியாளர்கள் இவ்விதிகளை முக்கியமாகக் கவனித்துத் தழுவி நடக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வி. பி. வித்தாச்சி,
பிரதம சுங்க சேகரிப்பாளர்.

11-1008

## பாடசாலை உபயோகத்திற்கென கல்வி நூற் பிரசுர ஆலோசனைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களின் பூரண அட்டவணை

1961 ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபையால் சிபார்சு செய்யப்பட்டு வித்தியாதிபதியால் பாடசாலை உபயோகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட (தமிழ்) பாடப் புத்தகங்களின் பூரண அட்டவணையொன்று கீழே கொடுபட்டுள்ளது.

2. பாடசாலை உபயோகத்திற்கு தற்பொழுது செல்லுபடியான பாடப் புத்தகங்கள் மட்டுமே இவ்வட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைக் கவனிக்கவும். அங்கீகாரங்களின் செல்லுபடி முடிவடைந்தவைகளும் இச்சபையால் மீண்டும் அங்கீகாரம் அளிக்கப்படாதவைகளுமான பாடப் புத்தகங்கள் யாவும் நீக்கப்பட்டுள்ளன.

3. சுலபமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு பாடப் புத்தகங்கள் வெவ்வேறு பாடங்களின் கீழும் அங்கீகாரக் கால எல்லையை வகுத்துக் காட்டும் அட்டவணைகளின் கீழும் கொடுபட்டுள்ளன. இப்புத்தகங்கள் பாடசாலை உபயோகத்திற்கு மேலும் செல்லுபடியாக வேண்டுமெனின் ஒவ்வொரு புத்தகமும் அங்கீகாரக் கால எல்லை முடிவடையும் பொழுது மீண்டும் இச்சபையால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

4. வித்தியா பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப் புத்தகங்கள் தவிர்ந்தவையும் இச்சபையால் சிபார்சு செய்யப்படாதவையுமான புத்தகங்களை பாடசாலை உபயோகத்திற்கு விதித்தல் குற்றமென்று சகல பாடசாலைத் தலைவர்களுக்கும் வித்தியாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

வித்தியா பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப் புத்தகங்கள், குறிப்புரைகளுடன் கூடிய இலக்கிய நூல்களின் புதுப் பதிப்புகள், சொற்றொகுதிகள், அகராதிகள், கோட்டுப்படங்கள், வரைப்படங்கள் ஆதியன இச்சபையின் அங்கீகாரத்தினின்றும் விலக்களிக்கப் பட்டுள்ளன.

5. வித்தியா பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்பட்டுள்ள பாடப் புத்தகங்கள் இவ்வட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

6. இவ்வட்டவணையில் கொடுபட்டுள்ள வரிசைக் கிரமம் புத்தகங்களின் சிறப்பு ஒழுங்கையோ முக்கியத்துவத்தையோ குறிப்பதல்ல.

கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி, கொழும்பு 2,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 20 ந் டெ.

ஹே. பெ. வீரசேகர,
செயலாளர்,
கல்விநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

### வகுப்பு வாசிப்புப் புத்தகங்கள்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | *உமா வாசகம் (1964 ம் ஆண்டுப் பதிப்பு) (1–5) | 1–5 | — | கலைவாணி புத்தக நிலையம் |
| 2. | *மாணவர் தமிழ் வாசகம் (1965 ம் ஆண்டுப் பதிப்பு) 1, 2 | 1, 2 | வே. கணபதிப்பிள்ளை | வே. கணபதிப்பிள்ளை |
| 3. | *மாணவர் தமிழ் வாசகம் (1963 ம் ஆண்டுப் பதிப்பு) 3, 6 | 3, 6 | ,, | ,, |
| 4. | *மாணவர் தமிழ் வாசகம் (1964 ம் ஆண்டுப் பதிப்பு) 4 | 4 | ,, | ,, |
| 5. | *மாணவர் தமிழ் வாசகம் (1961 ம் ஆண்டுப் பதிப்பு) 5 | 5 | ,, | ,, |
| 6. | சுதந்திர இலங்கை நவீன வாசகம் | 5 | — | மந்திரி கிரகோரி அன் கோ, கொழும்பு |
| 7. | சிறுவர் செந்தமிழ்ப் பயிற்சி மாலை | 2–4 | சொ. ச. கந்தப்பு | ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம் |
| 8. | செந்தமிழ்ப் பயிற்சி | 5 | ,, | ,, |
| 9. | செந்தமிழ்ப் பயிற்சி மாலை | 6 | ,, | ,, |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 10. | *சுதந்திர இலங்கை நவீன வாசகம், 1 ம், 2 ம், 3 ம் புத்தகங்கள் | 1–3 | — | மந்திரி கிரகோரி அன் கோ., கொழும்பு |
| 11. | *சுதந்திர இலங்கை நவீன வாசகம், 4 ம் வகுப்பு | 4 | — | ,, |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 12. | முஸ்லிம் பாலர் வாசகம் | 1–5 | எஸ். பீ. சாமிநாதன் ஏ. எல் எம். இஸ்மாயில் | சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தார், கொழும்பு |
| 13. | கன்னித்தமிழ் வாசகம் ,1 ம், 2 ம் புத்தகங்கள் | 6, 7 | வ. கி. இம்மானுவேல் | வ. கி. இம்மானுவேல் |
| 14. | உமாவாசகம் | 6, 8 | — | கலைவாணி புத்தக நிலையம்,யாழ்ப்பாணம் |
| 15. | பாலபாடம் | 6 | — | சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.63 தொடக்கம் 31.12.67 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 16. | கன்னித்தமிழ் வாசகம், 3 ம் புத்தகம் | | வ. கி. இம்மானுவேல் | வ. கி. இம்மானுவேல், 56, டோசன் வீதி, கொழும்பு |
| 17. | உமா வாசகம் | 7 | — | கலைவாணி புத்தகசாலை, யாழ்ப்பாணம் |
| 18. | பாலபோதினி | 7 | — | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 19. | முஸ்லிம் பாலர் வாசகம் | பாலர் கீழ் பிரிவு | எஸ். பீ. சாமிநாதன், ஏ. எல் எம். இஸ்மாயில் | சோனக இஸ்லாமியக் கலாச்சார நிலையத்தார், கொழும்பு |
| 20. | பாலபோதினி 1–6 | 1–6 | — | வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |

### தமிழ் இலக்கியம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் மலர் மாலை • | 7, 8 | — | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |
| 2. | *தமிழ் மஞ்சரி—முதற் புத்தகம் (1964 ம் ஆண்டுப் பதிப்பு) | 6 | ---- | ,, |
| 3. | *தமிழ் மஞ்சரி—மூன்றாம் புத்தகம் (1963 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 | | |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| இல. | புத்தகத்தின்பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 4. | இலக்கிய விருந்து—8 .. .. | — .. | — .. | அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் |
| 5. | தமிழ் இலக்கியச் சுடர்—8 க .. .. | — .. | — .. | வட—இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னுகம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | *இலக்கியப் பொய்கை 6, 7, 8 .. .. | — .. | அ. ஸ. அப்துஸ்ஸமது .. | அ. ஸ. அப்துஸ்ஸமது |

தமிழ் பாஷை

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | *பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி (1954 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 .. | இரத்தினம் செல்லையா .. | வட—இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |
| 2. | *தமிழ் மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்—முதற்புத்தகம் (1960 ம் ஆண்டுப் பதிப்பு) | 6 .. | தி. சதாசிவ ஐயர் .. | ஷை ஷை |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | தமிழ் மஞ்சரி 2 ம் புத்தகம் .. .. | 8 .. | — .. | வட—இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | *வளருந் தமிழ் 1ம், 2ம், 3ம் புத்தகங்கள் .. | 6ம், 7ம் .. உயர்தர | க. யோ. ஆசிநாதன் .. | க. யோ. ஆசிநாதன் |
| 5. | தமிழ் மொழி விளக்கம் .. .. | க.பொ.த... | க. கயிலாயநாதன் .. | க. கயிலாயநாதன், வட்டுக்கோட்டை |

பூமிசாத்திரம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | *ஐரோப்பாவும் இரு அமெரிக்காக் கண்டங்களும் (1959 ம் ஆண்டுப் பதிப்பு) | 7 .. | எஸ். எவ். டீ. சில்வா .. | அப்போதிக்கரீஸ் கம்பெனி, கொழும்பு |
| 2. | *உலகப் புவியியல் (1964 ம் ஆண்டுப் பதிப்பு) .. | க.பொ.த... | க. குணராஜா .. | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | பொற்கால பூமிசாஸ்திரம் .. .. | 6 .. | எம். ஆர். யோசப் .. | கலைவாணி புத்தக நிலையம் |
| 4. | *பொற்கால பூமிசாத்திரம் (1963 ம் ஆண்டுப் பதிப்பு) | க.பொ.த. .. | வி. எஸ். எஸ். ராம் .. | ஷை ஷை |
| 5. | இலங்கைப் புவியியல் .. .. | க.பொ.த. .. | க. குணராஜா .. | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | பொற்காலப் பூமிசாத்திரம் . .. | 7, 8 .. | எம். ஆர். யோசப் .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 7. | உலகம் .. .. .. | க.பொ.த. | எஸ். எவ். டி சில்வா .. | அப்போதிகரிஸ் கம்பெனி, கொழும்பு |
| 8. | இந்து சமுத்திரத்தைச் சார்ந்த தேசங்கள் .. | 6 .. | எஸ். எவ். டி சில்வா .. | ஷை ஷை |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | பூமிசாத்திரம் (பொது வியல்புகளும் தேசங்களும்) .. | க.பொ.த... | ஏ. டி. பப்டிஸ்ற் .. | ஓரியண்ட் லாங்மன்ஸ், சென்னை |

உபபாடப் புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பள்ளிக்கூடங்களுக்கான சமஉயரக்கோட்டுப் பயிற்சிகளும் படப்பயிற்சிகளும் .. | மேல் வகுப்புகளில் .. | ஏ. டி. பப்டிஸ்ற் .. | கிறிஸ்தவ இலக்கிய ஐக்கிய சங்கம், கொழும்பு |

சரித்திரம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | *புதுமுறைச் சரித்திரம்—பகுதி 3 (1964 ம் ஆண்டுப் பதிப்பு) .. | 8 .. | வி. எஸ. எஸ். ராம், ரீ. வீ. கே. மூர்த்தி .. | கலைவாணி புத்தக நிலையம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நம்முன்னேரளித்த அருஞ்செல்வம் மூன்றும் பாகம்.. | — .. | ஜீ. ஸி. மெண்டிஸ், எஸ். ஏ. பேகமன .. | அப்போதிக்கரீஸ் கம்பனி, கொழும்பு |
| 3. | *புதுமுறைச் சரித்திரம்—பகுதி 1 (1964 ம் ஆண்டுப் பதிப்பு) .. | 6 .. | ரீ. வீ. கே. மூர்த்தி .. | கலைவாணி புத்தக நிலையம் |
| 4. | *புதுமுறைச் சரித்திரம்—பகுதி 2 (1964 ம் ஆண்டுப் பதிப்பு) .. | 7 .. | வீ. எஸ். எஸ். ராம், ரீ. வீ. கே. மூர்த்தி .. | ஷை ஷை |
| 5. | நம்முன்னேரளித்த அருஞ்செல்வம்—முதலாம் பாகம்.. | உயர்தர .. | ஜீ. ஸி. மென்டிஸ் .. | அப்போதிக்கரீஸ் கம்பனி, கொழும்பு |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | புது உலக சரித்திரம் .. .. | — .. | வி. ஈ. நிகலஸ் .. | ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.66 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | *நம்முன்னேரளித்த அருஞ்செல்வம்—இரண்டாம் பாகம் .. | — .. | எஸ். ஏ. பேக்மன், ஜீ. ஸி. மெண்டிஸ் .. | அப்போதிக்கரீஸ் கம்பனி, கொழும்பு |

குடியியல்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | *குடியியல் 1ம், 2ம் புத்தகங்கள் (1963 ம் ஆண்டுப் பதிப்பு) .. | 6, 7 .. | எஸ். எவ். டி சில்வா .. | மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட் |
| 2. | *குடியியல் 3ம் புத்தகம் (1962 ம் ஆண்டுப் பதிப்பு).. | 8 .. | ஷை .. | ஷை ஷை |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| இல. புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 3. *குடியியல் | க.பொ.த. | எஸ். எவ். டி சில்வா | அப்போதிக்கரீஸ் கம்பனி, கொழும்பு |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.63 தொடக்கம் 31.12.67 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. *குடியியலும் அரசியலும்–1ம், 2ம் புத்தகங்கள் | க.பொ.த. | பிலின் டீ சொய்சா | பிலின் டீ சொய்சா |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 5. குடியியல் 6ம், 8ம் புத்தகங்கள் | 6, 8 | அ. விசுவநாதன் | அ. விசுவநாதன், 91, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |

## வர்த்தகம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. இக்கால வாணிப முறை | க.பொ.த. | க. நவரத்தினம் | வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

## கணக்குப் பதிவியல்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. உயர்தரக் கணக்குப் பதிவு நூல் | மேல்வகுப்பு | க. நவரத்தினம் | வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 2. கணக்குப் பதிவு நூல் | க.பொ.த. | க. நவரத்தினம் | வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

## ஆட்சி இயல்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. *ஆட்சி இயல் | — | ச. பேரின்பநாயகம் | வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

## சுகாதாரமும் சரீர சாத்திரமும்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. உடலியலும் சுகாதாரமும்-இரண்டாம் புத்தகம் | 6, 7 | எஸ். வி. பீ. பிள்ளை | எஸ். வி. பி. பிள்ளை |
| 2. சுகாதாரமும் சரீர சாத்திரமும் | க.பொ.த. | நா. நடராசா | கலைவாணி புத்தக நிலையம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 3. உடலியலும் சுகாதாரமும் | க.பொ.த. | எஸ். வி. பி. பிள்ளை | எஸ். வி. பி. பிள்ளை |
| 4. சுகாதாரக் கைநூல் 1 ம் 2 ம் பாகங்கள் | உயர்தர | மேரி. எச். இரத்தினம் | கிறிஸ்தவ இலக்கிய ஐக்கிய சங்கம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 5. சுகாதார போதினி | 6. 7 | டொக்டர். ச. அ. தர்மலிங்கம் | வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |
| 6. உடநல சாத்திரம் | உயர்தர | சுந்தரமூர்த்தி கந்தப்பு | வே. விநாயகமூர்த்தி |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 7. சுகாதார போதினி | 8 | டொக்டர். ச. அ. தர்மலிங்கம் | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |
| 8. சுகவழி | உயர்தர | செ. பொ. சாமிநாதன் | எஸ். கே. தம்பையா, மீசாலை |

## கேத்திர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. கேத்திர கணிதம் பகுதி 1, 2 | உயர்தர | வே. சிவக்கொழுந்து | வட-லங்கா புத்தகசாலை, பருத்தித்துறை |
| 2. அறிமுறைக் கேத்திர கணிதம்-முதலாம் புத்தகம் | உயர்தர | எஸ். கே. சந்திரசேகரன் | சமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |
| 3. கேத்திர கணிதம் | 8 | ஆர். எம். குணரத்தினம் தோமாஸ் ஈப்பன், ஆர். சோமசுந்தரம் | விற்றிள் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. கேத்திர கணிதம் பகுதி 2 | — | யோ. வே. குணரத்தினம் | அர்ச். சூசை மாமுனிவர் கத்தோலிக்க அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 5. கேத்திர கணிதம் முதற் புத்தகம் | 6–8 | ச. சிதம்பரப்பிள்ளை | வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

## அட்சர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. மாணுக்கர் அட்சர கணிதம் பகுதி, I, II | 6, 7, 8 க.பொ.த. | வ. பொன்னையா | அப்போதிக்கரீஸ் கம்பனி, கொழும்பு |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| இல. புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 2. அட்சர கணிதம் .. | .. 8 | .. ஆர். எம். குணரத்தினம், தோமாஸ் சப்பன், ஆர். சோமசுந்தரம், | விற்றின் பிளவர் புத்தக நிலையம், கர வெட்டி |
| 3. *அட்சரகணிதம் 2 ம் புத்தகம் .. | .. — | .. ச. சிதம்பரப்பிள்ளை | .. வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. அட்சர கணிதம்-முதற் புத்தகம் .. | .. 6–8 | .. ச. சிதம்பரப்பிள்ளை | .. வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |

அட்சர கேத்திர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. இலகுமுறை அட்சர கேத்திர கணிதம் | .. 8 | .. ந. இராமநாதன் | .. கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 2. அட்சர கேத்திர கணிதம் .. | .. 6 | .. தோமஸ் சப்பன், ஆர். சோமசுந்தரம் | விற்றின் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 3. இலகுமுறை அட்சர கேத்திர கணிதம் | .. 7 | .. ந. இராமநாதன் | .. கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.63 தொடக்கம் 31.12.67 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. இலகுமுறை அட்சர கேத்திர கணிதம் | .. 6 | .. ந. இராமநாதன் | .. கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 5. படிமுறை அட்சர கேத்திர கணிதம் | .. 6, 7 | .. ஏ. ஜே. ஆசீர்வாதம் | .. ஏ. ஜே. ஆசீர்வாதம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 6. அட்சர கேத்திர கணிதம் .. | .. 7 | .. தோமஸ் சப்பன், ஆர். சோமசுந்தரம் .. | விற்றின் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

எண் கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. சுதந்திர இலங்கை நவீன கணிதம் | .. 2 | .. சரவணமுத்து | .. மந்திரி பிரகோரி அன் கோ. |
| 2. நவீன வாழ்க்கைக் கணிதம் .. | .. 2–5 | .. க. சபாரத்தினம் | .. கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 3. படிமுறைக் கணிதம் .. | .. 6, 7, 8 க.பொ.த. | .. எம். வி. ஆசீர்வாதம் | .. எம். வி. ஆசீர்வாதம், 29, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. தமிழ் பாடி கணிதம் .. | .. 6, க.பொ.த. ஆயத்த வகுப்புவரை | .. வே. சிவக்கொழுந்து .. | வட-இலங்கை புத்தகசாலை, பருத்தித்துறை |
| 5. இலகு எண்கணிதம் (6–8) .. | .. உயர்தர வகுப்புகளில் | தோமஸ் சப்பன் | .. விற்றின் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 6. *புதிய பாடத்திட்ட எண்கணிதம் .. | .. 2–7 | .. வே. சிவக்கொழுந்து | .. வட-இலங்கை புத்தகசாலை, பருத்தித்துறை |
| 7. *உயர்தர எண்கணிதம் .. | .. க. பொ. த. மற்றும் | ,, | .. ,, |
| 8. கணிதம் .. .. | .. 2–8 | .. எஸ். ஏ. எட்வேட் | .. அச். சூசை மாமுனிவர் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் |
| 9. சுதந்திர இலங்கை நவீன கணிதம் | .. 5 | .. சரவணமுத்து | .. மந்திரி பிரகோரி அன் கோ, கொழும்பு |
| 10. *இலங்கை பாடசாலைகட்குரிய எண்கணிதம் | .. — | .. தாய் ஜேக்கப் | .. எம். டி. குணசேன அன்ட் கம்பனி லிமிட்டெட், கொழும்பு |
| 11. நவீன உயர்தர எண்கணிதம் .. | .. 6 ம் வகுப்பு தொடக்கம் | .. நா. நடராசா, நா. இராமநாதன் | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 12. இலகு எண்கணிதம் .. | .. 5 | .. தோமஸ் சப்பன் | .. விற்றின் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 13. சிறுவர் கணக்கு .. .. | .. 2–5 | .. ச. சிதம்பரப்பிள்ளை | .. வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |
| 14. படிமுறைக் கணிதம் .. | .. 2–5 | .. எம். வி. ஆசீர்வாதம் | .. எம். வி. ஆசீர்வாதம், 29, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |
| 15. இலகு கணிதம் உயர்தர வகுப்புகளுக்குரியது .. | உயர்தர | .. தோமஸ் சப்பன் | .. விற்றின் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.67 வரை

| | | | |
|---|---|---|---|
| 16. புதுமுறை எண் கணிதம், 3 ம் புத்தகம் | .. 8 | .. கா. பொ. இரத்தினம் சே. ஈ. செயசூரியா | .. மாக்மில்லன் அண்ட் கம்பெனி லிமிட்டெட் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.63 தொடக்கம் 31.12.67 வரை

| இல. புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 17. புதுமுறை எண்கணிதம் | க. பொ. த. | கே. அரிராஜசிங்கம் | ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம் |
| 18. நவீன வாழ்க்கைக் கணிதம் | 6 | க. சபாநடேசர் | கலைவாணி புத்தகசாலை, யாழ்ப்பாணம் |
| 19. ஷை | 7 | ஷை | ஷை |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 20. எண்கணிதம் | மேலவகுப்பு | ஜெ. பி. சானை, ஏ. மெகலிற | ஓரியனட் லாங்மன்ஸ், சென்னை |
| 21. எண்கணிதம் விரைவியல் | ஷை | அ. ஸ்மிதலிகோரி | அ. லிகோரி, கரவெட்டி |

உபபாடப் புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. புதுமுறை எண்கணிதம், 2 ம் புத்தகம் | 7 | கா. பொ. இரத்தினம், சே. ஈ. செயசூரியா | மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட் |

பொது விஞ்ஞானம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. பொது விஞ்ஞானம், 3 ம் புத்தகம் | 8 | ம. சி. பிரான்சிஸ் | சமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 2. பொது விஞ்ஞான போதினி | 7, 8 | ம. பரமானந்தன், நா. சா. இரத்தினசிங்கம் | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |
| 3. பொது விஞ்ஞானம், 1 ம், 2 ம் புத்தகங்கள் | 6, 7 | ம. சி. பிரான்சிஸ் | சமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. *புதுமுறைப் பொது விஞ்ஞானம் | 6, 7 | இ. நாகராசன், ந. சுந்தரமூர்த்தி | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.63 தொடக்கம் 31.12.67 வரை

| | | | |
|---|---|---|---|
| 5. பொது விஞ்ஞானம்-புத்தகம் 1, 2, 3 | — | எம். சி. பிரான்சிஸ் | வஸ்தியாம்பிள்ளை அன்ட் கொம்பனி |
| 6. பொது விஞ்ஞானபோதினி | 6 | ம. பரமானந்தம, நா. சா. இரத்தினசிங்கம் | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம் |

இரசாயனம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. நவீன இரசாயனம் | க. பொ. த. | எம். பரமானந்தன் | விஜயலட்சுமி புத்தகசாலை, வெள்ளவத்தை |

உயிரியல்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. உயிரியல் | க. பொ. த. | வீ. இராமகிருஷ்ணன், த. புத்திரசிங்கம் | த. புத்திரசிங்கம் |

பௌதிகவியல்

உபபாடப் புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.66 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. பௌதிகவியல், அடங்கல் I, II | க. பொ. த | இளையதம்பி. சின்னத்தம்பி | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அரபுப் பாடம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. தஃலீமுல் அரபிய்யா | ஆரம்ப வகுப்புகளில் | ஓ. எம். பாவஸிஆலிம் | ஓ. எம். பாவஸிஆலிம் |

இஸ்லாம் மத பாடம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. சாந்தி மார்க்கம், 3 ம், 4 ம் புத்தகங்கள் | 4, 5 | முஹம்மது பளீல் | எம். யஹ் யாஸ் |
| 2. *இஸ்லாம் மத போதினி | 6 | ஜனுப் உமர் நயினார் | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 3. இஸ்லாம் மத பாடம் | 6 | ஏ. எம். கனி | ஏ. எம். கனி |
| 4. ஷை | 2-5 | ஷை | கலைவாணி புத்தக நிலையம், கண்டி |

ரோமன் கிறீஸ்த சமயம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.62 தொடக்கம் 31.12.66 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. புதிய சதியவேத போதகச் சுருக்க வினு விடை 1-3 | — | — | லாசாலியன் வெளியீடு, கொழும்பு 15 |
| 2. காத்தரின் பாதை, முதற் புத்தகம் | — | — | ஷை |

சைவ சமய பாடம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| இல. புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. சைவ சமய பாடம் | 2, 3, 4, 5 | — | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |
| 2. சைவ சமய போதினி | 3 | — | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |
| 3. *சைவ சமய பாடம் | 6, 7, 8 | — | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை 1.1.64 தொடக்கம் 31.12.68 வரை

| | | | |
|---|---|---|---|
| 4. சைவ சமய போதினி | 2, 4, 5, 6 | — | வட-இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம் |

உப-பாடப் புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை 1.1.65 தொடக்கம் 31.12.69 வரை

| | | | |
|---|---|---|---|
| 1. சைவ போதம், முதற் புத்தகம் | உயர்தர | சு. சிவபாதசுந்தரம் | சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் |

*அடுத்த பதிப்பு திருத்தியமைக்கப்படவேண்டும்.

11-1070

---

## அறிவித்தல்

இத்தால் அறியத்தருவது, அக்குரெஸ்ஸ வாடிவீடு, 1965 ம் ஆண்டு டிசெம்பர் மாதம், 11 ந் திகதி, மு. ப. 6 மணி தொடக்கம் பி. ப. 6 மணி வரைக்கும் பொதுசனத்துக்கு மூடப்பட்டிருக்கும். அதற்கு முந்திய இரவு வருகை தருபவர்கள், 11.12.65 ந் திகதி மு. ப. 6 மணிக்கு வாடிவீட்டைவிட்டு நீங்கச்சம்பந்தப்பட்டாலொழிய, வாடிவீட்டில் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எப். சீ. பீட்டர்ஸ்,
அரசாங்க அதிபர், மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 16 ந் உ.

11-1034

---

## துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்—1966

அம்பாறை மாவட்டம்

1965 ம் வருடம் மார்கழி மாதம் 1 ந் திகதியிலிருந்து அம்பாறை மாவட்டத்திற்குச் சேர்ந்த துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் குறிக்கப்பட்ட பிரிவுக் காரியாதிகாரிகளால் புதுப்பிக்கப்படும். ஆகையால் பிரிவுக் காரியாதிகாரிகளிடம் துப்பாக்கியுடையவர்கள் 1965 ம் வருடம் மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன் மனுச் செய்தல் வேண்டும்.

2. 1966 ம் வருடம் அனுமதிப் பத்திரங்கள் வழங்கு முன்னர், 1965 ம் வருட அனுமதிப் பத்திரங்களையும், துப்பாக்கிகளையும் குறித்த காரியாதிகாரிகட்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. 1965 ம் வருடம் மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன் தங்களுடைய அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காதவர்கள் அனுமதிப் பத்திரக் கட்டணத்திற்கு சமமான அபராதத்திற்கு ஆளாவார்கள். பிரிவுக் காரியாதிகாரர்களால் தொடர்ந்து 1966 ம் வருடம் பங்குனி மாதம் 31 ந் திகதிவரை அபராதத்துடன் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும்.

4. 1966 ம் வருடத்திற்கான அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காத அனுமதிப் பத்திரக்காரர் அல்லது துப்பாக்கி பாவிக்க முடியாத நிலைமையிலிருந்தால் அத்துப்பாக்கியை அதன் அனுமதிப் பத்திரத்துடன் 1965 ம் வருடம் மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன் புதுப்பிக்கும் உத்தியோகத்தரிடம் அல்லது எனது காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. 1966 ம் வருடம் பங்குனி மாதம் 31 ந் திகதிக்கு முன் தங்கள் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

டபிள்யூ. ஆர். பி. திலகரெட்ண,
அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம்.

அம்பாறைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு கார்த்திகை மீ 12 ந் உ.

11-923

---

## 1966 ம் ஆண்டுக்குரிய அனுமதிச்சீட்டு புதுப்பித்தல்

காலி டிஸ்திறிக்

துப்பாக்கியுடைய சொந்தக்காரர்கள் தங்களின் 1966 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டுகளை 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி வரையிலும் அவரவர் வசிக்கும் காரியாதிகாரியின் கந்தோரில் புதுப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பணம் அனுப்பும்போது 1965 ம் ஆண்டுக் குரிய அனுமதிச்சீட்டையும் சேர்த்து அனுப்ப வேண்டும். 1965 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டு காணுமல் போயிருந்தால் ஒரு ரூபா கூடுதலாக கட்டி சேட்டிபிக்கேட் பெற்றுக் கொள்ள வேண்டும். அனுமதிச் சீட்டுடையோர் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னமே அனுமதிச் சீட்டுகளை புதுப்பிக்காவிட்டால் அனுமதிச்சீட்டு கட்டணத்திற்கு சமமான தண்டனைப் பணத்திற்கு ஆளாவர். தண்டனைக்குரிய பணத்தையும் சேர்த்து 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதி வரையிலும் காரியாதிகாரியிடம் அனுப்பினுல் அனுமதிச்சீட்டுகளை பெற்றுக் கொள்ள முடியும். அதன் பிறகு புதுப்பித்தல்கள் கச்சேரியில் மாத்திரம் வழங்கப்படும். அனுமதிச் சீட்டுடையவர்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்கு முன்னமே புதுப்பிக்காவிட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும். பணத்திற்குப் பதிலாக முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

3. துப்பாக்கியுடைய சொந்தக்காரர்கள் அனுமதிச் சீட்டுகளைப் புதுப்பிக்கும்போது அவைகளை என்முன் கொண்டுவந்து காட்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்க அதிபர்.

1965 ம் ஆண்டு ஒக்ரோபர் 31 ந் உ.

11-993

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாலைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.